بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 08/03/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**உஹுது போரில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் துஆ ஏற்றுக் கொள்ளப்படுதல், சஹாபா மற்றும் சஹாபியாக்கள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) உடைய தியாகங்கள் மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதான நேசத்திற்கான ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய குறிப்பு**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ ـ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ـ

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

உஹுது போரில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபி ஹஸ்ரத் சஃது (ரலி) அவர்களின் துஆ ஏற்றுக்கொள்ளப்படுவதற்காக, ஹுஸூர் (ஸல்) அவர்கள் செய்த துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டது பற்றிய நிகழ்வு இவ்வாறு வருகிறது: ஹஸ்ரத் ஆயிஷா பின்த் சஃது (ரலி) அவர்கள் தம் தந்தை ஹஸ்ரத் சஃது (ரலி) அவர்களிடமிருந்து அறிவித்துள்ளார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: மக்கள் திருப்பித் தாக்குதல் தொடுத்த போது நான், ‘அவர்களை என்னை விட்டு விலக்கி விடுவேன்; ஒன்று, நான் ஈடேற்றம் அடைந்து விடுவேன் அல்லது நான் ஷஹீது ஆகி விடுவேன்’ என்று கூறினேன். திடீரென்று நான் ஒரு செந்நிற முகம் கொண்ட மனிதரைக் கண்டேன். இணைவைப்பாளர்கள் அவர் மீது மேலோங்கி விட இருந்தார்கள். அப்பொழுது அந்த நபர் தம்முடைய கைகளில் கூழாங்கற்களை நிரப்பி அவர்கள் மீது எறிந்தார். அப்பொழுது திடீரென்று எனக்கும் அந்த நபருக்கும் நடுவில் மிக்தாத் (ரலி) அவர்கள் வந்து விட்டார்கள். அவர்கள் கூறினார்கள்: இது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஆவார்கள். அன்னார் உம்மை அழைத்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது எனக்கு எந்தத் துன்பமுமே ஏற்பாடாதது போன்று இருந்தது. நான் திடீரென்று எழுந்து நின்றேன். மேலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னைத் தமக்கு முன்னால் அமர்த்திக் கொண்டார்கள். நான் அம்பு எறியத் துவங்கினேன். மேலும், நான் இப்படிக் கூறுவேன்: ‘அல்லாஹ்வே! உன்னுடைய அம்பாகும். நீ இதனால் உன் எதிரியைக் கொல்வாயாக.’ மேலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறுவார்கள்: அல்லாஹ்வே! நீ சஃது உடைய துஆவை ஏற்றுக் கொள்வாயாக! அல்லாஹ்வே! சஃது உடைய குறியை சரியாக்கி விடுவாயாக!

ச:்:தே! உன் மீது என் தாய் தந்தையர் அர்ப்பணமாகட்டும். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இதைப் பற்றி இவ்வாறு எழுதியுள்ளார்கள்: ஹஸ்ரத் ச:்:து பின் வக்காஸ் (ரலி) அவர்கள் தமது கடைசி காலம் வரை இந்தச் சொற்களை மிகவும் பெருமிதத்தோடு எடுத்துக் கூறி வந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளையால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கா:்:பிர்களின் தாக்குதலை எப்படி முறியடித்தார்கள் என்பதைப் பார்ப்போம். இது பற்றி இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஹாபா பெருமக்களின் கூட்டத்துடன் பாறை மீது நின்று கொண்டிருந்தார்கள். தீடீரென்று காலித் பின் வலீத் அவர்களின் தலைமையில் குறைஷிகளின் ஒரு கூட்டம் மலை மீது வந்து சேர்ந்து விட்டது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எதிரியை மேலே பார்த்து இவ்வாறு துஆ செய்தார்கள்: 'அல்லாஹ்வே! எங்கள் மீது மேலோங்குவது அவர்களுக்கு ஆகுமானதல்ல. அல்லாஹ்வே! உன் மூலமே அன்றி எங்களுக்கு ஆற்றலும் பலமும் இல்லை.' அந்தக் கணமே ஹஸ்ரத் உமர் :்:பாரூக் (ரலி) அவர்கள் முஹாஜிர்களின் ஒரு குழுவுடன் இணைந்து அந்த மக்களை எதிர்த்துப் போராடி, அவர்களைப் பின்னுக்குத் தள்ளி, அவர்களை மலையிலிருந்து கீழிறங்குமாறு நிர்பந்தித்து விட்டார்கள். இந்த நிகழ்வு தொடர்பாக அல்லாஹ்வின் இந்த வழிகாட்டல் இறங்கியது:

وَلَا تَهِنُوْا وَلَا تَحْزَنُوْا وَاَنْتُمُ الْاَعْلَوْنَ اِنْ كُنْتُمْ مُّؤْمِنِيْنَ

மேலும், பலவீனத்தைக் காட்டாதீர்கள். மேலும், வேதனை கொள்ளாதீர்கள். நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களாயின், நிச்சயமாக நீங்களே மேலோங்கக் கூடியவர்கள் ஆவீர்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் காயமுற்றிருந்த நிலையிலும் சஹாபாவைப் பற்றி கவலை கொண்டது குறித்து ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உஹுது நாளைப் பற்றி கூறும் போது, அந்த நாள் முழுக்க முழுக்க தல்ஹாவின் நாளாக இருந்தது என்று கூறுவார்கள். பிறகு, அந்த விபரத்தை இவ்வாறு கூறுவார்கள்: உஹுது நாளன்று நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பக்கம் திரும்பி வந்த மக்களில் ஒருவனாக இருந்தேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கீழ் பக்க நான்காவது பல் உடைந்து விட்டிருந்தது. முகம் காயமடைந்திருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய கன்னத்தில் தலைக்கவசத்தின் இரும்புத் துண்டுகள் பதிந்து விட்டிருந்தன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் உங்களுடைய தோழருக்கு, அதாவது, தல்ஹாவுக்கு உதவி செய்யுங்கள்.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இந்த நிகழ்வுகள் சிலவற்றை முன்னரும் எடுத்துக் கூறி விட்டிருக்கிறேன். சிலவற்றில் ஏதேனும் புதிய விஷயங்கள் இருக்கும். ஒரு சில புது வரிகள் இருக்கும். வேறு விதமாக கூறப்பட்டிருக்கும். எனவே, மீண்டும் எடுத்துரைத்து விடுகிறேன்.

மதீனத்துப் பெண்களின் பொறுமை மற்றும் (இறை) திருப்தியைப் பெறுதலின் முன்மாதிரிகள் தொடர்பாக சில எடுத்துக்காட்டுகள் உள்ளன. உஹுது போருக்குப் பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவுக்குத் திரும்பிய போது, ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களின் மனைவி ஹம்னா பின் ஜஹ்ஷ் (ரலி) அவர்களுக்கு அவர்களின் சகோதரர் மற்றும் மாமா ஷஹீது ஆனது பற்றி மக்கள் செய்தி தெரிவித்தார்கள். அப்பொழுது அவர்கள் இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன் என்று கூறினார்கள். ஆனால், அவர்களின் கணவர் ஷஹீது ஆனது பற்றிய செய்தியைத் தெரிவித்த போது அந்த சஹாபியா அழத் துவங்கினார். மேலும், நிம்மதியிழந்து போனார். மேலும், ‘அந்தோ பரிதாபம்!’ என்று கூறினார்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ‘நீ ஏன் இப்படிப்பட்ட சொல்லைக் கூறினாய்?’ என்று வினவிய போது ஹம்னா (ரலி) அவர்கள் கூறினார்கள்: கணவருக்காக மட்டும்தான் கூறினேன். எனக்கு அவருடைய பிள்ளைகள் அநாதையாகி விட்டார்களே என்பது நினைவுக்கு வந்து விட்டிருந்தது. அதனால் நான் கவலைக்குள்ளானேன். கவலை நிலையில் இந்தச் சொல் எனது நாவிலிருந்து வந்து விட்டது.

இதைக் கேட்ட ஹுஸூர் (ஸல்) அவர்கள் முஸ்அப் (ரலி) அவர்களின் சந்ததிகளுக்காக இவ்வாறு துஆ செய்தார்கள்: அல்லாஹ்வே! அவர்களின் பாதுகாவலனே! மேன்மை மிக்கோனே! அவர்களுடன் பரிவுடனும் கருணையுடனும் நடந்து கொள்வாயாக! அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வாயாக!

ஹஸ்ரத் ஹிந்த் (ரலி) அவர்களுக்குத் தம் கணவர், சகோதரர் மற்றும் மகன் ஆகிய மூவரும் ஷஹீது ஆகி விட்டார்கள் என்பது தெரிய வந்ததும், இவர்கள் அவர்கள் மூவரையும் ஒட்டகத்தின் மீது வைத்து, மதீனாவில் நல்லடக்கம் செய்வதற்காக எடுத்துச் சென்று கொண்டிருந்தார்கள். ஒட்டகத்தின் முகத்தை மதீனாவின் பக்கம் திருப்பும் போது அது அமர்ந்து கொள்ளும். உஹுது பக்கம் திருப்பும் போது அது வேக வேகமாக நடக்கத் துவங்கி விடும்.

ஹஸ்ரத் ஹிந்த் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்த போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அதைப் பற்றித் தெரியப்படுத்தினார்கள். அப்போது ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இந்த ஒட்டகம் இறைவனால் கட்டளையிடப்பட்டுள்ளது. அதாவது, மதீனா பக்கம் செல்லக்கூடாது; மாறாக, உஹுது பக்கம் செல்ல வேண்டும் என்ற பணியிலேயே அது அல்லாஹ்வின் தரப்பிலிருந்து ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'உன் கணவர் போருக்கு செல்லும் முன் ஏதாவது கூறினாரா?' என்று கேட்டார்கள். ஹஸ்ரத் ஹிந்த் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அவர்கள் உஹுது களத்தை நோக்கி புறப்படலான போது, அவர்கள் கிப்லா பக்கம் முகம் திருப்பி இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வே! என் குடும்பத்தார் பக்கம் வெட்கப்பட்டவனாய் என்னைத் திருப்பி அனுப்பாதிருப்பாயாக! என்னை ஷஹீது ஆகச் செய்வாயாக!

இதைக் கேட்ட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இதனால்தான் ஒட்டகம் செல்லவில்லை. மேலும், கூறினார்கள்: அன்ஸாரிகளின் குழுவே! உங்களில் சிலர் எப்படிப்பட்ட நன்மக்கள் என்றால், அவர்கள் இறைவன் மீது ஆணையிட்டு ஒன்றைக் கூறினால், எல்லாம் வல்ல இறைவன் அவர்களின் அக்கூற்றை நிச்சயம் நிறைவேற்றுகின்றான். அம்ர் பின் ஜமூஹ்வும் அவர்களில் ஒருவர் ஆவார்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** இரண்டாவது உலகப் போரில் ஜெர்மனியின் ஒரு வயதான பெண்ணின் மகன் போரில் கொல்லப்பட்டான். அவள் ஒரு செயற்கையான சிரிப்பு சிரித்து அந்தச் செய்திக்குத் தன்னுடைய எதிர்நடவடிக்கையை வெளிப்படுத்தினாள். அந்த நாள்களில், பாருங்கள்! இந்தப் பெண் எவ்வளவு பொறுமையைக் காட்டியிருக்கிறாள் என்று செய்தி வந்தது.

**ஹுஸூர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:** அவள் சிரித்தாள்தான்; ஆனால், அதன் வெளிப்பாடு அழுத்தத்தில் அழுந்தியிருப்பது தெரிய வருகிறது. அதாவது, அவள் மனதில் அழுது கொண்டிருந்தாள். ஆனால், சஹாபியாவின் நிகழ்வு, அவர் அடக்கி வைத்திருந்தார்; மனதில் அழுது கொண்டிருந்தார் என்பதல்ல. மாறாக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்று அவர் மனதிலும் மகிழ்ச்சியாக இருந்தார்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** நான் அந்தப் பெண்மணியின் சம்பவத்தைப் படிக்கும் போது, எனது உள்ளம் அவர் மீதான மரியாதை மற்றும் கண்ணியத்தால் நிறைந்து விடுகிறது. நான் அந்தத் தூய பெண்மணியின் ஆடையின் விளிம்பைத் தொட்டு, கைகளை கண்களில் ஒற்றிக் கொள்ள வேண்டும். அவர் என் அன்பிற்குரியவருக்காகத் தான் கொண்டிருந்த அன்பின் ஒரு நிகரற்ற நினைவை விட்டு விட்டார்.

**ஹுஸூர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** இந்த அன்பைத்தான் எல்லாம் வல்ல இறைவன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தொடர்பாக அந்த மக்களுடைய உள்ளத்தில் உருவாக்கி விட்டிருந்தான். எல்லாம் வல்ல இறைவனுக்கு எதிரில் அவர்கள் தாய் தந்தையர், சகோதர சகோதரிகள், மனைவிகள் மற்றும் கணவர்களைப் பொருட்படுத்தியதில்லை. அவர்களுக்கு முன் ஒரே ஒரு விஷயம்தான் இருந்தது. அது அவர்களுடைய இறைவன் அவர்கள் மீது திருப்தி கொண்டு விட வேண்டும் என்பதாகும். எனவே, எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்களுக்காக ரலியல்லாஹு அன்ஹூ என்று கூறிவிட்டான்.

ஒரு வாழ்க்கை வரலாற்று எழுத்தாளர் இவ்வாறு எழுதுகிறார்: ஐயமின்றி, மதீனாவின் இன்னல் மிகவும் வேதனை மிகுந்த இன்னலாக இருந்தது. ஆனால், மக்காவு(டைய காஃபிர்களு)க்கும் மதீனாவு(டைய முஸ்லிம்களு)க்கும் மத்தியில் ஓர் இன்னலை ஏற்பதில் மிகப் பெரும் வித்தியாசம் இருந்தது. மக்கத்து இணைவைப்பாளர்கள் பத்ரில் ஏற்பட்ட தம்முடைய இன்னல்களை சிறிது பலவீனம், கவலை மற்றும் பதற்றத்துடன் ஏற்றார்கள். ஆனால், மதீனா உஹுதில் ஏற்பட்ட தனது இன்னலை நிகரற்ற பொறுமையுடனும் ஈமானுடனும், பொறுமை, உறுதியான பாதம் மற்றும் வீரத்துடன் ஏற்றது.

உஹுது போரில முஸ்லிம்களுக்கும் பெரும் இழப்பு ஏற்பட்டது. ஆனால், அவர்களின் இந்த இழப்பு(டைய விளைவு) நிகரற்ற பொறுமையாக இருந்தது. ஈமானாக இருந்தது. உறுதிவாய்ந்த பாதமும் வீரமும் இருந்தது. மதீனாவின் படைக்கு உஹுதில் ஏற்பட்ட இழப்பின் காரணமாக மதீனா வாழ் மக்களில் எவருக்கும் பதற்றம், கவலை மற்றும் பலவீனத்தின் எந்த அடையாளமும் இருக்கவில்லை.

மற்றவை இனி எடுத்துரைக்கப்படும். இன் ஷா அல்லாஹ்.

பாலஸ்தீனத்து மக்களுக்காக துஆ செய்யுங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்களுக்கு எளிமையை ஏற்படுத்துவானாக! எதிரியோ தன்னுடைய எல்லா விதமான தரம் தாழ்ந்த சிந்தனைகள் மற்றும் செயல்கள் மூலமாக அவர்களை அழிக்க முற்பட்டுள்ளான். பெரும் ஆற்றல்கள் போரை நிறுத்துவதற்கு பதிலாக அதைத் தூண்டிவிடுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கின்றன. எல்லாம் வல்ல அல்லாஹ்வால் மட்டுமே அவர்களுடைய கைகளைத் தடுத்து நிறுத்த முடியும். எனவே, அதிகமாக துஆ செய்யுங்கள்.

இவ்வாறே, எந்தத் தொண்டு நிறுவனம் மூலமாக அவர்களுக்கு உணவு அல்லது மருந்துகள் போன்றவை அல்லது எந்த விதத்திலாவது உதவி கிடைக்க முடியுமோ அதை அஹ்மதிகள் செய்ய வேண்டும். தமது வட்டத்தில் அவர்களுக்கு ஆதரவாக, அநீதியை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பாக முயற்சியும் செய்ய வேண்டும். அரசியல்வாதிகளுக்குக் கடிதங்கள் எழுதுங்கள். நீங்கள் என்ன செய்கிறீர்களோ அது மிகப் பெரும் தவறை செய்கிறீர்கள் என்று அவர்களுக்குப் புரிய வையுங்கள். பாலஸ்தீனத்துக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ் துஆக்கள் செய்வதற்கும் தம்முடைய ஆன்மிக நிலையை மேற்படுத்துவதற்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக!

யுக்ரைன் மற்றும் ரஷ்யா போரிலும் ஐரோப்பாவும் அமெரிக்காவும் நேரடியாக கலந்து கொள்ளப் போவதாக செய்திகள் வருகின்றன. அதனாலும் உலகப் போருக்கான ஆபத்துகள் மேற்கொண்டு அதிகரிக்கின்றன. இதற்காகவும் துஆ செய்யுங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் உலகை அழிவிலிருந்து காப்பாற்றுவானாக.

முன்னெச்சரிக்கை ஏற்பாடு என்கிற வகையில் முன்னரும் நான் கூறியிருந்தேன். எனக்கு முன்பு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களும் அணு ஆயுதத்தின் தாக்குதலிலிருந்து தப்பிப்பதற்கு ஒரு மருந்துக்

குறிப்பை வழங்கியிருக்கிறார்கள். அதையும் குறைந்த பட்சம் மூன்று மூன்று டோஸ் மருந்தின் ஒரு **Course** ஐ மீண்டும் எடுத்து முடிக்க வேண்டும். இவ்வாறே, அஹ்மதிகள் தங்கள் வீடுகளில் இரண்டு மூன்று மாதங்களுக்கான ரேஷனையும் வைத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக, எங்கு நேரடியாக போருக்கான ஆபத்து இருக்கிறதோ அங்கு வைத்துக் கொள்ள வேண்டும். போர் நடக்கவில்லை என்றாலும் கூட அதற்குப் பலன் உள்ளது.

ஏமனின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் அவர்கள் விடுதலையாவதற்கான ஏற்பாட்டை விரைவில் செய்வானாக! உலக மக்கள் முன்னேற்றம் என்ற பெயரில் உலகின் அசுத்தங்களில் மூழ்குவதற்கு பதிலாக அல்லாஹ்வை அடையாளம் காணக்கூடியவர்களாக ஆவார்களாக! எல்லாம் வல்ல அல்லாஹ் உலகிற்கு இதற்கான அறிவையும் வழங்குவானாக! முஸ்லிம் நாடுகளையும் எல்லாம் வல்ல அல்லாஹ் நீதியில் நிலை நிற்கச் செய்து ஒன்றுபடுவதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! நாம் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் தூதுச் செய்தியை ஒவ்வொருவர் வரையும் எட்ட வைப்பதற்கான நல்வாய்ப்பை நமக்கும் வழங்கிடுவானாக!

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஃஹிஸ்ர் ஹயாத் சீமா சாஹிப் அவர்களின் மகன், பஹாவல்பூர் மாவட்டத்தின் ஃபதஹ்பூரின் பகுதியான சக் 84 இன் சத்ர் ஜமாஅத் மதிப்பிற்குரிய தாஹிர் இக்பால் சீமா சாஹிப் அவர்கள் ஷஹீது ஆனது பற்றி எடுத்துக் கூறினார்கள். இவர்கள் கடந்த நாள்களில் ஷஹீது ஆக்கப்பட்டார்கள்.*

*மேலும், ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள்:* எல்லாம் வல்ல அல்லாஹ் ஷஹீது மர்ஹூம் அவர்களின் படித்தரத்தை உயர்த்துவானாக! கருணை மற்றும் பாவமன்னிப்பு வழங்குவானாக! பின்விட்டுச் சென்றவர்களுக்கு அழகிய பொறுமையை வழங்கிடுவானாக! இவர்கள் செய்த நன்மையைத் தொடர்வதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இவர்களுக்கு ஜனாஸா காயிப் தொழவைப்பதற்கான அறிப்பையும் செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ
اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ
يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ
يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃஃக்னீ)